3. ஒழுங்குப் பிரச்சினை

பேரவை நடவடிக்கைக் குறிப்பு நகல் நூலகத்தில் வைக்கப் படாமை.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : அடுத்து, இரண்டு நாட்களுக்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்ட சபை உறுப்பினர்கள் இங்கே பேசுகின்ற பேச்சுக்கள் நூல் நிலையத்திலே வைக்கபபட்டுவதில்லை என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். என் கருத்தைப் பின்னால் கூறுகிறேன் என்றேன். அதைப்பற்றிக் கூற விரும்புகின்றேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் அவர்களுடைய பேச்சுக்கள் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக்கம் செய்யப் படுகின்றன. உறுப்பினர்களுடைய பேச்சுக்கும், எடுக்கப் படுகின்ற குறிப்பிற்கும் சில சமயம் மாறுபாடுகள் இருக்கலாம். அவற்றை அப்படியே நூல் நிலையத்தில் வைப்பதற்கில்லை. மாண்பு மிகு உறுப்பினர் பேசிய பேச்சின் நகல் உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் திருத்தி அவர்களுடைய ஒப்புதலோடு வைக்க வேண்டுமென்ற காரணத்தால் இடையிலே சில நாட்கள் ஆகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திருத்தப் பட்ட பேச்சுக்கள் நூல் நிலையத்தில் வைக்கப்படும் என்ற உறுதியைக் கூறுகிறேன்.

4. 1967–68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் XII— போலீஸ்.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : அடுத்து, 1967–68-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. முதலில் கோரிக்கை எண் XII போலீஸ் மானியம் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XII போலீஸ் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,73,08,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்: இப்போது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழியலாம்.

THIRU T. M. NALLASWAMY: Sir, to discuss about the conduct of the police towards the public and political parties, I move the following cut motion—

'That the allotment of Rs. 10,73,08,100 under Demand No. XII – Police be reduced by Rs. 100.